R4867

# "OVERTURNED UNTIL HE COME"

# "அவர் வரும்வரை கவிழ்க்கப்பட்டிருக்கும்"

எசேக்கியல் 21:25-27

"தீமையை விட்டு விலகி, நன்மை செய்; சமாதானத்தை தேடி, அதை தொடர்ந்து கொள்." சங்கீதம் 34:14

தேவன் நியாயப்பிரமாணத்தை இஸ்ரயேல் தேசத்தாரிடம் கொடுத்த போது அதன் விதிகள் மற்றும் நிபந்தனைகளைக் கூறினார். அதன் பேரில் அவர்கள் அவரது ஜனங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் தெய்வீக தேவைகளுக்கு கீழ்ப்படிந்தால் சகலமும் அவர்களுக்கு நல்லதாக இருக்கும். அவர்கள் செல்வ செழிப்பான, கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட ஜாதியாக இருப்பார்கள். ஆனால், அதற்கு மாறாக தெய்வீக சட்டங்களை புறக்கணித்து விக்கிரக ஆராதனைக்காரர்களாக ஆனால் அவர்கள் தண்டனைக்காக அவர்களது சத்துருக்களின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள். "ஏழு கால" தண்டனை அவர்கள் மேலும் கடந்து செல்லும். ( லேவியராகமம் 26:18, 21, 24, 28)

ஆரம்ப முதல் முடிவு வரை தேவன் அனைத்தையும் நிச்சயமாக அறிந்தவராக இருக்கிறார்; எனினும் தெய்வீக பொறுமை, தேசத்தின் அனுபவம் முழுவதும் சிதேக்கியாவின் ராஜ்யம் கவிழ்க்கப்படும் வரை வெளிப்படுத்தப்பட்டது.தாவீதின் அரியணையில உட்கார்ந்தவர்களில் கடைசி ராஜா சிதேக்கியா ஆகும். தேசத்தின் நடைமுறைகளிலும் ராஜாக்களினிடத்திலும் தீமையானது எப்படி நன்மையை தொடர்ந்தது என்பதை நாம் பார்த்திருக்கிறோம்; எப்படி ஜனங்களை தண்டித்து மறுபடியும் மறுபடியும் விக்கிரக ஆராதனையிலிருந்து திரும்ப கொண்டு வந்தது என்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். இப்பொழுது மோசே மூலம் முன்னுரைக்கப்பட்டபடி தேசத்தின் ஆட்சி "ஏழு காலங்கள்" அல்லது ஏழு வருடங்கள் முழுவதுமாக கவிழ்க்கப்பட வேண்டிய நேரம் வந்திருந்தது. எனினும் இந்த விஷயத்தில் வருடங்கள் என்பது அடையாளமானதாக இருக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் ஏழு வருடங்களுக்கு மேலாக அநேகம் தடவை அடிமைப்பட்டிருந்தார்கள். இதை உண்மை என்று ஏற்றுக்கொண்டால் அடையாளமான இந்த ஏழு வருடங்கள் அல்லது காலங்கள் உண்மையில் எத்தனை வருடங்களைக் குறிக்கிறது?

வேதாகமமானது ஒரு வருடத்தை ஒரு நாளாக அடையாளமாக சொல்லுகிறது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு உண்மை. யூத வருடமானது, ஒவ்வொன்றும் முப்பது நாட்களைக் கொண்ட பன்னிரெண்டு மாதங்களை உடையதாக இருந்தது. அடையாளமான ஒவ்வொரு வருடமும் முந்நூற்றி அறுபது வருடங்களை உடையதாக இருந்தது. ஆகையால் ஏழு கால தண்டனை என்பது 7×360=2520 வருடங்கள் ஆகும்.

ஆகையால், மேசியா வரும்வரை ராஜ்யத்தை "கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்" என்று நாம் வசிக்கும் போது கவிழ்க்கப்பட்ட வருடங்கள் மொத்தமாக 2520 வருடங்கள் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். இது கிமு 606. (இது ஜனங்கள் எருசலேமிற்கு திரும்பி போவதற்கு அனுமதி அளித்து கோரேஸ் ராஜா பிரகடனம் செய்த வருடம் கிமு 536க்கு70 வருடங்களுக்கு முன்னர் ஆகும்)

### உண்மைகளைக் குறித்த ஒரு பார்வை

தெய்வீக கணிப்புகளின் நிறைவேறுதலை கவனிப்பது வேத மாணவர்களுக்கு எப்பொழுதும் ஆவலானதாகவும் பிரயோஜனமானதாகவும் இருக்கிறது. அது விசுவாசத்தை நிலைநிறுத்துகிறது; அது தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அனைத்தையும் மிகவும் மெய்யானதாக ஆக்குகிறது; அது இஸ்ரயேலின் காரியங்களில் தெய்வீக மேற்பார்வையை நமக்கு உறுதிப்படுத்துகிறது. இப்படியாக, சபையாகிய ஆவிக்குரிய இஸ்ரயேலரின் காரியங்களிலும் தெய்வீக மேற்பார்வையை நமக்கு உறுதிப்படுத்த காரணமாயிருக்கிறது.

நாம் சரித்திரத்தை பின்னோக்கி பார்க்கும் போது இஸ்ரயேல் தேசம் கவிழ்க்கப்படும், கவிழ்க்கப்படும் என்கிற பிரகடனம் நிறைவேறியதை நாம் காண்கிறோம். கோரேஸ் ராஜா மூலம் அவர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பிய பிறகு (கிமு 536) 600 வருடங்கள் தேசம் இருந்தது. எனினும் தெய்வீக வாக்குத்தத்தின்படி தாவீதின் சந்ததியின் ஆளுகை செய்யாமல், புறஜாதி தேசங்களின் ஆளுகையில் இருந்தது. அது குறித்து எழுதப்பட்டிருப்பதாவது: "புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்." சிலர் மெக்கபேயர்களின் ராஜாக்களை சுட்டிக்காட்டலாம், அவர்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்களோ அல்லது ராஜ குடும்பமோ அல்ல என்று நாங்கள் பதிலளிக்கிறோம். சிலர் இயேசுவின் காலத்தில் ஏரோது ஆளுகை செய்ததைக் குறிப்பிடலாம், அவர்கள் தாவீதின் வழியில் வந்தவர்கள் அல்ல என்று நாம் பதிலளிக்கிறோம். அவர்கள் ஏதோமியர்கள் அல்லது ஏசாவின் வழியில் வந்தவர்கள். அவர்கள் இஸ்ரயேலின் பிள்ளைகளை ரோம சாம்ராஜ்யத்தின் பிரதிநிதிகளாக இருந்து ஆளுகை செய்தார்கள்.

### புறஜாதியாரின் காலம்

தேவன் உலகில் தாவீதின் குடும்பம் என்று குறிப்பிடப்பட்ட தம்முடைய நிழலான ராஜ்யத்தை, இஸ்ரயேலின் நிழலான ராஜ்யத்தை நீக்கின போது, அவர் பூமிக்குரிய ஆளுகையை புறஜாதிகளுக்கு கொடுத்தார். இந்த குத்தகையின் அதிகாரம் தானியேலின் தீர்க்கதரிசனத்தில் குறிப்பிடப்பட்டது போல, "ஏழு காலங்கள்" அதாவது 2520 வருடங்கள் தொடர வேண்டும். வேறு வார்த்தையில் சொல்லுவோமானால் அதே காலப்பகுதியில், "ஏழு கால" இன்னல்களையும் அடிமைத்தனத்தையும் அனுபவிக்க வேண்டும். புறஜாதிகள் "ஏழு காலங்கள்" செழிப்பாக இருப்பார்கள். இரண்டுமே ஒரே சமயத்தில் அதாவது கிமு 606லிருந்து 2520 வருடங்களுக்கு பிறகு கிபி1914 அக்டோபரில் முடிவுக்கு வரும். இது புறஜாதியார் காலத்தின் முடிவு. இந்த தேதிகளின் துல்லிய தன்மைக் குறித்து யாராவது தகராறு செய்தால், நாம் அது குறித்து சண்டை போட அவசியமில்லை. இதில் ஏதாவது வித்தியாசமிருந்தால் ஒரு வருடம் அல்லது 20 வருடங்கள் இருக்கலாம். இது ஒரு சிறிய வேறுபாடாக இருக்கலாம்.

இதில் விசேஷித்த ஆவலான காரியங்கள் என்னென்ன, இந்த நீண்ட காலப்பகுதி நிறைவடையும் போது என்ன நடக்கும்.
(1) இஸ்ரயேலின் காரியத்தில் உண்மைகள் முன்னரே நாம் கவனித்தது தான். தேசம் அடிபணிதல் கிட்டத்தட்ட 700 வருடங்கள், தேசம் 1800 வருடங்களுக்கு மேலாக நாசமானது. புறஜாதியார்களைப் பொருத்த வரை கீழே கொடுக்கப்பட்டுள்ளபடி சுபிட்சமான காலம்:

பாபிலோன் – முதலாவது உலக பேரரசு
மேதோ, பெர்சியா – இரண்டாவது உலக பேரரசு
கிரேக்கம் – மூன்றாவது உலக பேரரசு
ரோம் – நான்காவது உலக பேரரசு

இந்த காரியத்தைக் குறித்த வேதவாக்கியங்களின் கண்ணோட்டத்தில் நான்காவது உலக பேரரசாக போப்பரசும் உலக கிறிஸ்தவ அரசாங்கங்களும் இன்னும் குறிப்பிடப்படுகின்றன. தேவனுடைய நிழலான ராஜ்யமாகிய இஸ்ரேயலின் ராஜ்யம் அடிமைப்பட்டு கவிழ்க்கப்பட்டு போன பிறகு இந்த நீண்ட காலத்தில் புறஜாதி ராஜ்யங்கள் ஆளுகை செய்து செழித்திருந்தன.

(2) “ஏழு காலங்கள்” முடிந்த பிறகு (2520 வருடங்கள், கிபி. 1915) மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். இஸ்ரயேலின் பிள்ளைகள் அங்கீகரிக்கப்பட்டு, பூமியின் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்.

அக்டோபர் 1914, கிறிஸ்துவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். சிலர் யூகிப்பது போல பூமியனாது வெந்து உருகிப் போகாது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மாறாக, உலகத்தை ஆசீர்வதிக்கும் வேலையை செய்ய வேண்டியிருக்கும். “உலகத் தோற்றம் முதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித்தீரும் காலங்களின்” ஆரம்பத்தை அது குறிக்கும். (அப்போஸ்தலர் 3:19-23)